Registered as a News Paper in Sri Lanka

பக்கங்கள்: 04

விலை ரூபா: 3-50

கண்டுக்குளி ... நூலகம்

ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஸ்ரீ ஆனி மீ 11 ஆம் உ திங்கட்கிழமை (25 - 06 - 1990) ஹிஜ்ரி 1410 ஜுல்ஹஜ் 1 ஓசை 127

## இன்றைய இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு ராஜீவே காரணம்

(சென்னை)

இப்போதைய தமிழர் பிரச்சினைக்கு முந்திய ராஜீவ்காந்தி அரசாங்கமே காரணம் என தமிழக முதலமைச்சர் கருணாநிதி குற்றம் சாட்டியுள்ளார், நேற்று முன்தினம் திருசசியில் பத்திரிகையாளர்களுக்குப் பேட்டி அளிக்கும் போதே முதல்வர் கருணாநிதி இவ்வாறு தெரிவித்தார்.

ஈ பி. ஆர். எல். எப் இயக்கததிற்கு ராஜீவ் அரசுஅளித்து வந்த ஆதரவை குறிப்பிட்ட முதல்வர் கருணாநிதி இவ் ஈ. பி. ஆர். எல். எப் இயக்கத்தினர் தான் சிறிது காலத்திற்கு முன்னர் தனி ஈழப்பிரகடனம் (4 ஆம் பக்கம் பார்க்க)

# ஆஸ்பத்திரிப் பகுதியை அமைதிப் பிரதேசமாக்கப் பிரபா சம்மதம்!

### கல்முனையில்

## 3 இராணுவம் பலி பொம்மர் அடி

(கல்முனை)

கல்முனையிலிருந்து நேற்று முன்தினம் அக்கரைப்பற்றுக்கு (4 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவமும் ஒத்துழைக்க செஞ்சிலுவைச் சங்கம் முயற்சி

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் பகுதியை அமைதிப் பிரதேசமாக பிரசடனப்படுத்த தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் இணங்கியுள்ளார்.**

இந்தப் பகுதியை நிராயுத பிரதேசமாக (De- Militarised Zone) செயற்படுத்துவதற்கு விடுதலைப் புலிகள் இணங்கியுள்ளனர்.

அதே சமயம் சிறிலங்கா இராணுவமும் எந்த இராணுவ நடவடிக்கைகளையும் ஆஸ்பத்திரி வளாகத்தில் மேற்கொள்ளக் கூடாது எனவும் விடுதலைப் புலிகள் கேட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளின்போது பல தடவைகள் யாழ். போதனா வைத்தியசாலை தாக்கப்பட்டுள்ளதுடன் நோயாளிகள், டாக்டர்கள், ஊழியர்களும் இறந்துள்ளனர்.

கோட்டை முகாமிலிருந்து கடந்த செவ்வாய்க் கிழமை மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் 17 ஆம் வார்ட் சேதமடைந்ததால் ஊழியர்களும், நோயாளர்களும் உடனடியாகவே வெளியேறினர்.

இதனையடுத்து தற்போது மானிப்பாய் மெமோறியல் (4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் வெற்றிக்காக குடும்பப்பெண் உண்ணாவிரதம்

(வல்வெட்டித்துறை)

விடுதலைப் புலிகளின் வெற்றிக்காக தேவரையாளி நரசிம்மர் ஆலயத்தில் குடும்பப் பெண் ஒருவர் உண்ணாவிரதம் இருக்கின்றார்.

நீதிக்காகப் போராடிவரும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வெற்றியும் சிங்கள வெறியாதிக்க வல்லரசிற்கு பலத்த தோல்வியையும் பெற்றுத்தருமாறு தேவரையாளியைச் சேர்ந்த ஏழு பிள்ளைகளின் தாயாரான குடும்பப் பெண் திருமதி நவரட்ணம் என்பவர் தேவரையாளி நரசிம்மர் ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் எவ்வித ஆகாரமும் இன்றி உண்ணா விரதத்தை மேற்கொண்டு வருகின்றார். (68)

## இன்றைய பிரச்சினைக்கு அரசாங்க அமைப்பே காரணம்

### எஸ். டி- பண்டாரநாயக்கா

(கொழும்பு)

வெஸ்ட் மினிஸ்டர் முறையிலான அரசாங்க அமைப்பின் காரணமாகவே நாட்டில் தற்போதைய பிரச்சினை தோன்றியுள்ளது என்று இலங்கை முற்போக்கு முன்னணியின் தலைவர் எஸ். டி. பண்டாரநாயக்கா நேற்று கொழும்பு புதியநகர மண்டபத்தில் நடைபெற்ற இம் முன்னணியின் முதலாவது வருடாந்த மாநாட்டில் கூறினார்.

சகல கட்சிகளும் ஒன்று சேர்ந்து நாட்டின் தேவைக்கு ஏற்ற வகையில் அரசியல் யாப்பு ஒன்றை தயாரிப்பதன் மூலமே இப் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும் என்றும் அவர் கூறினார்.

### பண்டாரிக்குளத்தில்

## இராணுவம் சுட்டு இருவர் புலி

## காங்கேசன்துறை மோதலில் அதிகாரி உட்பட 7 இராணுவம் பலி

(கொழும்பு)

காங்கேசன்துறை-தொண்டமனாறு வீதியில் விடுதலைப் புலிகளுக்கும், ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும் இடையில்

அதேவேளை இத் தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் 11 பேர் கொல்லப்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

கள் தரப்பில் ஒருவர் மரணமடைந்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

## யாழ். கோட்டைக்குள் பொதி போட முயற்சி

(யாழ்ப்பாணம்)

நேற்றுமாலை மீண்டும் சிறிலங்கா விமானப்படை ஹெலிகொப்ரர்கள் இரண்டு-கோட்டை இராணுவத்தினர்களுக்கு இரண்டு பொட்டலங்களைப் போட்டது.

இப் பொட்டலங்களைப் போட முற்பட்டபோது நிலத்திலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் துப்பாக்கிப்பிரயோகம் செய்து ஹெலிகப்ரர்களை துரத்தினர். இப பார்சல்களில் ஒரு பொதி கோட்டைக்குள் வீழ்ந்ததாகவும் தெரிய வருகிறது. (அ)

## கல்வி திணைக்கள ஊழியருக்கு சம்பளம் வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

ஆசிரிய சம்பளத்துக்கான பணம் வட-கிழக்கு கல்வியமைச்சில் இருந்து பெறப்படாமையால் சகல ஆசிரியர்களுக்கும் தலா ரூபா 1000 வழங்கப்படவுள்ளது. இக் கொடுப்பனவை செவ்வாய் அல்லது புதனன்று ஆசிரியர்கள் பெற்றுக் கொள்ளலாம் என்று யாழ். கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது.

அதேவேளை யாழ் கல்வித் திணைக்களத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கும் கல்வி அதிகாரிகளுக்குமான இம் மாதத்துக்கான முழுச் சம்பளக் கொடுப்பனவும் கடந்த வெள்ளியன்று வழங்கப்பட்டது.

## கிளிநொச்சி அகதி முகாமிற்கு உணவு வழங்க நடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அகதிகளுக்கு ஒரு வாரத்திற்கான உணவுப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

முதற்கட்டமாக வட கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழக கிளிநொச்சி மாவட்டக் கிளையினால் உருத்திரபுரம் காந்தி சேவாசங்கத்தில் நடாத்தப்பட்டு வரும் அகதிமுகாமில் தங்கியிருக்கும் அகதிகளுக்கே உணவுப்பொருட்கள் வழங்கப் படவுள்ளன.

அதையடுத்து பூநகரி கௌதாரிமுனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தங்கியிருக்கும் அகதிகளுக்கும் ஏனைய பொது இடங்களில் தங்கியிருக்கும் அகதிகளுக்கும் உணவுப்பொருட்கள் வழங்கப் (4 ஆம் பக்கம் பார்க்க)

### கிளிநொச்சி

# இன்றைய பிரச்சினைக்கு அரசாங்க அமைப்பே காரணம்

**எஸ். டி. பண்டாரநாயக்கா**

(கொழும்பு)

வெஸ்ட் மினிஸ்டர் முறையிலான அரசாங்க அமைப்பின் காரணமாகவே நாட்டில் தற்போதைய பிரச்சினை தோன்றியுள்ளது என்று இலங்கை முற்போக்கு முன்னணியின் தலைவர் எஸ். டி. பண்டாரநாயக்கா நேற்று கொழும்பு புதியநகர மண்டபத்தில் நடைபெற்ற இம் முன்னணியின் முதலாவது வருடாந்த மாநாட்டில் கூறினார்.

சகல கட்சிகளும் ஒன்று சேர்ந்து நாட்டின் தேவைக்கு ஏற்ற வகையில் அரசியல் யாப்பு ஒன்றை தயாரிப்பதன் மூலமே இப் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும் என்றும் அவர் கூறினார்.

விடுதலைப் புலிகள் இணங்கியுள்ளனர்.

அதே சமயம் சிறிலங்கா இராணுவமும் எந்த இராணுவ நடவடிக்கைகளையும் ஆஸ்பத்திரி வளாகத்தில் மேற்கொள்ளக் கூடாது என

பெற்ற இராணுவ நடவடிக்கைகளின்போது பல தடவைகள் யாழ். போதனா வைத்தியசாலை தாக்கப்பட்டுள்ளதுடன் நோயாளிகள், டாக்டர்கள், ஊழியர்களும் இறந்துள்ளனர்.

தாக்குதலில் 17 ஆம் வார்ட் சேதமடைந்ததால் ஊழியர்களும், நோயாளர்களும் உடனடியாகவே வெளியேறினர்.

இதனையடுத்து தற்போது மானிப்பாய் மெமோறியல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

அல்லது புதனன்று ஆசிரியர்கள் பெற்றுக் கொள்ளலாம்

கடந்த வெள்ளியன்று வழங்கப்பட்டது.

# காங்கேசன்துறை மோதலில் அதிகாரி உட்பட 7 இராணுவம் பலி

(கொழும்பு)

காங்கேசன்துறை-தொண்டமனாறு வீதியில் விடுதலைப் புலிகளுக்கும், ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் இராணுவ அதிகாரி ஒருவரும், ஆறு சிப்பாய்களும் கொல்லப்பட்டதாகப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

அதேவேளை இத் தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் 11 பேர் கொல்லப்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

ஆனால் இத் தாக்குதலில் பத்துக்குமேற்பட்ட ஸ்ரீலங்கா இராணுவத்தினர் இறந்துள்ளதாகவும், விடுதலைப் புலிகள் தரப்பில் ஒருவர் மரணமடைந்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

# கிளிநொச்சி அகதி முகாமிற்கு உணவு வழங்க நடவடிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அகதிகளுக்கு ஒரு வாரத்திற்கான உணவுப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

முதற்கட்டமாக வட கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழக கிளிநொச்சி மாவட்டக் கிளையினால் உருத்திரபுரம் காந்தி சேவாசங்கத்தில் நடாத்தப்பட்டு வரும் அகதிமுகாமில் தங்கியிருக்கும் அகதிகளுக்கே உணவுப்பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

அதையடுத்து பூநகரி கௌதாரிமுனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் தங்கியிருக்கும அகதிகளுக்கும் ஏனைய பொது இடங்களில் தங்கியிருக்கும் அகதிகளுக்கும் உணவுப்பொருட்கள் வழங்கப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

**பண்டாரிக்குளத்தில்**

## இராணுவம் சுட்டு இருவர் பலி வீடுகளுக்குத் தீ வைப்பு

(வவுனியக)

பண்டாரிக்குளம் பகுதியில் பாதுகாப்பான இடம் தேடி சென்றுகொண்டிருந்த பொது மக்களை வழிமறித்து தாக்கிய இராணுவம் இரண்டு இளைஞர்களை சுட்டுக் கொன்றுள்ளது,

மேலும் பண்டாரிக்குளம் பகுதியையும் அயற் கிராமங்களையும் சேர்ந்த பல வீடுகளை இராணுவத்தினர் தீயிட்டு கொளுத்தியுள்ளதாகவும் இதனால் அப்பகுதி புகைமண்டலமாக தென்படுவதாகவும் அங்கிருந்து நேரடியாக கிடைத்துள்ள செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால் இக்கிராமங்களை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி ஷெல் தாக்குதல் 3புலிகள் மரணம் 10பேர் காயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் முகாமில் இருந்து ஷெல் ஏவியதில் விடுதலைப் புலிகளில் மூவர் வீரமரணமடைந்துள்ளனர். பத்து விடுதலைப் புலிகள் காயம் அடைந்துள்ளனர்.

கிளிநொச்சியிலுள்ள இராணுவத்தினர் முகாமிலிருந்து நகரை நோக்கி ஷெல் ஏவி வருகின்றனர். இதனால் நகரில் பல கட்டிடங்கள் தொடர்ந்து சேதமடைந்துகொண்டிருக்கின்றன. பொது மக்களும் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் ஏவப்பட்ட ஷெல்லில் விடுதலைப் புலிகளில் ரஞ்சித் (வட்டக் கச்சி), நவசீலன் (முரசு மோட்டை), சுந்தரராஜா ஆகியோர் வீரமரணமடைந்துள்ளனர்.

## பி. பி. ஸி. நிருபருக்கும் ஹெலி அனுபவம்

(வவுனியா)

கொழும்பிலுள்ள பி. பி. ஸி. நிருபர் நேற்றுக் காலை வடபகுதிக்கு மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்த போது ஓமந்தையில் வைத்து ஹெலிகப்டரில் இருந்து சுடப்பட்டார்.

இதனையடுத்து அவர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

**கிளிநொச்சி**

## கச்சேரி பொருட்கள் பத்திரமாக ஒப்படைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சிக் கச்சேரிக்கு சொந்தமான பல லட்சம்ரூபா பெறுமதி வாய்ந்த பொருட்களை விடுதலைப் புலிகள் பாதுகாத்து மேற்படி அரசாங்க அதிபரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கிளிநொச்சி கச்சேரி சேதமாக்கப்பட்டதை அடுத்து அக் கச்சேரியிலுள்ள பல பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

இக் கொள்ளை சம்பந்தமாக விடுதலைப் புலிகளின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதை அடுத்து விடுதலைப் புலிகளால் கிளிநொச்சி கச்சேரிக்கு போதிய பாதுகாப்பு அளிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து சுமார்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# ஆட்டிலறி ஷெல் அடிப்பது உலக நியதிக்கு முரண் !

### செஞ்சிலுவைச் சங்க வட்டாரம் அதிர்ச்சி

(யாழ்ப்பாணம்)

பலாலி முகாமிலிருந்து ''ஆட்டிலறி ஷெல்'' கணைகளை யாழ். நகரை நோக்கியும் வேறுகுடி மக்கள் செறிந்து வாழும் பகுதிகளுக்கும் ஏவி விடுவது குறித்து செஞ்சிலுவைச்சங்க வட்டாரங்கள் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளன.

''ஆட்டிலறி ஷெல்'' மக்களுக்கும் உடைமைகளுக்கும் கடும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் எந்த ஒரு நாடும் அதன் மக்களுக்கு எதிராக இதனைப் பிரயோகிக்கக் கூடாது என்பது சர்வதேச நியதியாகும் என்றும் இவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒரு நாடு இன்னொரு நாட்டுக்கு எதிராக போர்தொடுக்கும் போது மாத்திரமே இந்த பயங்கர ஆயுதத்தை பிரயோகிக்கலாமென்பது சர்வதேச கோட்பாடாகும்.

கடந்த சில நாட்களாக உரும்பராய், கோப்பாய் ஆகிய கிராமங்களுக்கு மேலாகஇரவு வேளைகளில் இந்த ''ஆட்டிலறி ஷெல்'' ஏவப்படுவதை அவ்வூர் வாசிகள் அவதானித்துள்ளார்கள். பலாலியில் இக் கணையை ஏவும் சத்தம் கேட்டதும் ஒருவித ஓசையுடன் நெருப்பு பிளம்பு போன்று தங்கள் ஊருக்கு மேலாக இது செல்வதை இவர்கள் அவதானித்துள்ளார்கள். (75)

## எரிபொருள் எடுக்க இராணுவம் தடை!

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவில் அத்தியாவசிய சேவைகளுக்குப் பயன்படுத்த எரிபொருள்களைப்பெற இராணுவத்தினர் தடையாக உள்ளனர். முல்லைத்தீவுஇராணுவ முகாம்வாயிலில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்து அவற்றைப் பெற அரசாங்க அதிபர் அனுமதி கோரியிருந்தார். முதல் நாள் அனுமதி தருவதாக தெரிவித்த இராணுவத்தினர் மறுநாள் சென்றபோது மறுத்துவிட்டனராம்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## பெற்றோல் இல்லாததால் கேரதீவுப் பயணமில்லை

(யாழ்ப்பாணம்)

கேரதீவு - சங்குப்பிட்டி பாதை இயங்குவதற்கு பெற்றோல் இல்லாததால் இப் பாதையால் போக்குவரத்து செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வழமையாக ஒரு நாளைக்கு 60 லீற்றர் பெற்றோல் தேவைப்படும் இவ்விடத்தில் சமீப காலமாக ஏனைய வீதிகளில் போக்குவரத்துக் கெடுபிடிகள் ஏற்பட்டதை அடுத்து 150 லீற்றர் வரையிலான பெற்றோல் பயன்படுத்தப்பட்டு வந்தது. தற்போது இருப்பில் இருந்த பெற்றோல் முடிவடைந்ததால் இப்பாதை இயங்காதிருக்கிறது என்று தெரியவந்துள்ளது. (75)

## சிங்களக் கிராமங்களுக்கு பாதுகாப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் இடையில் உள்ள சிங்கள எல்லைக் கிராமங்களுக்குப் பாதுகாப்பு பலப்படுத்தபபட்டுள்ளது.

இவற்றில் ஊர்காவல்படையினர் காவல்களுக்கு நிறுத்தப்பட்டுள்ளனர்.

# கண்ணி வெடித்தாக்குதலில் இராணுவ டிரக் சுக்குநூறு!

(திருக்கோணமலை)

புல்மோட்டை, 10 ஆம் கட்டை ஆகிய இடங்களிலிருந்து காலை 11 மணிக்கு 13 ஆம் கட்டையை நோக்கி வந்த இராணுவத்தொடரை 13 ஆம் கட்டையில் புலிகள் எதிர்கொண்டு தாக்கினர். 13 ஆம் கட்டைச் சந்தியில் புலிகள் வைத்த கண்ணி வெடியில் சிக்கிய டிரக் ஒன்று சுக்குநூறாகியது. வாகனத்தில் பிரயாணம் செய்த பதினைந்துக்கும் அதிகமான ஸ்ரீலங்கா இராணுவச் சிப்பாய்கள் சின்னாபின்னமாகினர்.

கல்லிறவு இராணுவ முகாமைச் சேர்ந்த இரு சிப்பாய்கள் கண்ணி வெடியில் சிக்கிக் கால்களை இழந்தனர். 22 ஆம் திகதி 150 பேரைக் கொண்ட மேற்படி இராணுவ முகாமைச் சேர்ந்த சிப்பாய்கள் முகாமை இரவோடு இரவாக மூடி விட்டுப் பீரங்கிப்படகில் ஏறிக் கடல் மார்க்கமாகச் சென்றுள்ளார்கள் பின்வாங்கிச் செல்லும் போது அங்கு நிறுத்தி வைத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் பாதுகாப்பு முதல் கச்சதீவு வரை கோரிக்கை

(திருச்சி)

''இலங்கை அரசினால் தமிழ் மக்கள் கொல்லப்படுவதை தடுத்து நிறுத்துவதுடன், அவர்களை பாதுகாப்பதற்கான முழு நடவடிக்கைகளையும் இந்திய அரசு மேற்கொள்ளவேண்டும்'' என்று இந்திய ஐக்கிய பொதுவுடைமைக் கட்சியின் செயலாளரான கா. பாண்டியன் இந்திய மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல்தாக்குதலில் காயமடைந்த 125 பேருக்குச் சிகிச்சை

(சுதுமலை)

ஷெல் தாக்குதல்களினாலும், பொம்பர் தாக்குதல்கள் மற்றும் துவக்குச்சூடு ஆகியவற்றினால் காயமடைந்த சுமார் 125 பேர் மானிப்பாய் கிறீன் வைத்தியசாலையில் இயங்கும் யாழ். போதனா வைத்தியசாலைப்பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

இதைவிட ஏற்கனவே யாழ். போதனா வைத்திய சாலை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பீரங்கித் தாக்குதலினால் மக்கள் இடம் பெயர்வு

(சுதுமலை)

காரைநகர் கடற்படை முகாமிலிருந்தும் கடலில் நங்கூரமிட்டு தரித்து நிற்கும் பீரங்கிப் படகுகளிலிருந்தும் தொடர்ந்து நடைபெறும் ஷெல், பீரங்கித் தாக்குதல்களினால் கடும் பாதிப்புற்று ஊரி, தோப்புக்காடு ஆகிய பகுதிகளில் இருந்து ஆயிரக் கணக்கான குடும்பங்கள் சங்கானைப் பகுதி நோக்கி வந்து தஞ்சம் புகுந்துள்ளனர். இதைவிட தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்தும் பெருந்தொகையான அகதிகள் இப் பகுதியில் புகலிடம் தேடி வந்துள்ளனர்.

இது பற்றி வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் தகவல் தருகையில், சுமார் மூவாயிரம் குடும்பங்களைச் சேர்ந்த இந்த அகதிகள் சங்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பு நகருக்குள் இராணுவம் செல்லவில்லை

(லண்டன்)

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளைக் காட்டுக்குள் அனுப்பிவிட்டோம் என இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது ஆனால் கொழும்பில் இருந்துவரும் செய்திகள் இன்னும் கிழக்கு மாகாணத்தின் முக்கிய நகரான மட்டக்களப்பிற்குள் இராணுவம் இன்னும் செல்லவில்லை என நேற்றுமுந்தினம் பி.பி.சி தமிழோசைச் செய்தி அறிக்கையில் குறிப்பிட்டது.

## வல்வையில்

# கடற்படை தாக்குதல்

(வல்வெட்டித்துறை)


வல்வைப்குதியை நோக்கி கடற்படை கடும் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

கிறீஸ்தவ தேவாலயம், நவீனசந்தை பாரிய சேதங்களுக்குள்ளாகின. சுங்கத் திணைக்களத்துக்கு முன்பாக தரையில் கட்டிவைக்கப்பட்ட மீன் பிடிப்படகு தாக்குதலுக்குள்ளாகி எரிந்தது. வல்வையில் தபால் ஊழியர் ஒருவரும் சமரபாகு என்னும் இடத்தில் இருவரும் கடுமையான காயத்திற்குள்ளாகினர்.

மேற்படி சம்பவம் சென்ற வெள்ளிக்கிழமை மாலை சுமார் 4-30 மணியளவில் நடைபெற்றது.

பருத்தித்துறைப் பகுதியிலிருந்து காங்கேசன்துறை பகுதியை நோக்கிச் சென்று கொண்டிருந்த கடற்படையினர் வல்வைப் பகுதியை வந்தபோது, செல் தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலின் போது சுங்கத் திணைக்களம் முன்பாக கட்டிவைக்கப்பட்ட பெறுமதியான மீன்பிடிப் படகு எஞ்சினுடன் முற்றாக எரிந்து சேதமாகியது. இத் தாக்குதலில் பலர் காயத்திற்குள்ளாகி மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



# ஹெலி ஆரவாரம் முடிந்தும் ஆஸ்பத்திரி திறக்கவேயில்லை

## நோயாளர் பற்றி கவலையில்லை! டாக்டர், ஊழியர்கள் தப்பி ஓட்டம்!

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி அரசினர் ஆஸ்பத்திரிக்கு சமீபமாக நேற்றுக் காலை 7 மணியளவில் நடைபெற்ற ஹெலி ஹொப்ரர் சூட்டுச் சம்பவத்தை அடுத்து அச்சுவேலி ஆஸ்பத்திரி நேற்று முழுவதும் செயல்படவில்லை டாக்டர்களும் அனைத்து ஊழியர்களும் வேலையை ஆரம்பிக்காது வீடு திரும்பினார்கள்.

ஆனையிறவிலிருந்து பலாலி நோக்கி பறந்து வந்த ஹெலி ஹொப்ரரில் இருந்த ஸ்ரீலங்கா படையினர் சந்தேகத்துகிடமான எதையோ கீழே வீதியில் பார்த்துவிட்டனர். ஹெலி வரும்போது கறுப்புச் சேட் அணிந்த இளைஞர் ஒருவர் சைக்கிளை வீதியில் போட்டு விட்டு அருகிலிருந்த வாழைத்தோட்டத்தினுள் ஓடினார். இ: போ. ச. பஸ் ஒன்றும் வந்துகொண்டிருந்தது. சற்று தூரத்தில் எல்வ் வாகனம் ஒன்றும் சென்றுகொண்டிருந்தது. இவற்றில் எதுதான் படையினர் கண்களை உறுத்தியதோ தெரியவில்லை. எல்லாம் 15 நிமிட நேரத்தில் முடிந்து விட்டன. ஆனால் அச்சுவேலி அரசினர் ஆஸ்பத்திரியோ நேற்று முழுவதும் அதனை நம்பிய நோயாளர்களை அம்போ என்று விட்டுவிட்டது.

எல்லாம் முடிந்த பின்னர் அங்கு சென்ற நோயாளர் சிலரை வாசலில் நின்ற ஊழியர் ஒருவர் ''என்ன நடக்குது என்று உமக்குத் தெரிய வில்லையா? ஹெலி அடுத்தமுறை வருவதற்குள் இங்கிருந்து ஓடித் தப்பிவிடும்'' என்று பொரிந்து தள்ளினார். நோயாளரோ ஊழியரை சமாதானப்படுத்தப்படுத்தப் பார்த்தார். "எதையோ கண்டு விட்டு சுட்டார்கள் இப்போது அதுவும் போய் விட்டது ஹெலியும் போய்விட்டது இனி மருந்து எடுக்கலாமே, என்றதும் ஊழியர் சர்வ வல்லமை பொருந்தியவர் போன்று கன்னா பின்னா என்று கத்தினார். ஏற்கனவே நோயினால் வருந்திக் கொண்டிருந்த நோயாளி எதுவும் பேசாமல் வீடு திரும்பினார்.

ஆஸ்பத்திரி பூட்டப்பட்டிருந்ததை அவதானித்த மக்களுக்கு அச்ச உணர்வு அதிகரிக்கவே அப்பகுதி வெறிச்சோடியது. ஆஸ்பத்திரியில் பணியாற்ற வீட்டிலிருந்து வந்து கொண்டிருந்த டாக்டருக்கு ஏற்கனவே வீதியில் காத்து நின்ற மற்றுமொரு ஊழியர் நிலைமையை 'கச்சிதமாக' விளக்கி டாக்டரை அவ்விடத்தில் வைத்தே திருப்பி அனுப்பி விட்டார்.

(75)

# கொள்ளை தீவைப்பு

(யாழ்ப்பாணம்)

கிழக்கில் மாவத்தை சென்ரல் காம்ப் கொலனி, ஆகிய இடங்களில் உள்ள தமிழர் வீடுகளிலும் கடைகளிலும் இராணுவத்தினர் பெருந்தொகை பெறுமதியான பொருட்களைக் கொள்ளையிட்டதோடு வீடுகளையும், கடைகளையும் தீக்கிரையாக்கியுள்ளனர்.

# 35 தமிழர் சுட்டுக் கொலை

அம்பாறை மாவட்டத்தில் காரைதீவு என்னும் இடத்தில் முப்பத்தைந்து தமிழ்மக்களை இராணுவத்தினர் சுட்டுக் கொன்றதுடன் அதே இடத்தில் மேலும் நான்கு தமிழர்களை வெட்டிக் கிணற்றுக்குள் போட்டுள்ளனர்.

மேலும் நாற்பத்தைந்து தமிழ் இளைஞர்களைக் கைது செய்து தமது முகாம்களுக்கு அழைத்துச் சென்றுள்ளனர் இதுவரை இவ் இளைஞர்கள் பற்றிய விபரம்எதுவும் தெரியவரவில்லை. (லோ)

# 500 குடும்பங்கள் வரை மல்லாகத்தில் தஞ்சம்

சமீபகாலமாக தமிழ் மக்களுக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசு ஆரம்பித்த போரினால் பெரிதும் பாதிக்கப்பட்ட பகுதிகளான கட்டுவன், மயிலிட்டிதெற்கு, மயிலிட்டி வடக்கு, தையிட்டி, காங்கேசன் துறை, மயிலிட்டி, குரும்பசிட்டி. பலாலி, வசாவிளான் ஆகிய கிராமங்களில் இருந்து தமது வீடுகளை விட்டு வெளியேறிய ஏறக்குறைய 500 குடும்பங்கள் வரை மல்லாகத்தில் தனியார் வீடுகளிலும் பொது நிறுவனங்களிலும் தஞ்சம் புகுந்துள்ளனர். மல்லாகத்தில் குளமங்கால் புனிதசவேரியர் தேவாலயத்திலும் குளமங்கால் றோமன் கத்தோலிக்க பாடசாலையிலும் நீதிமன்ற கட்டடங்களிலும் மல்லாகம் இ.போ.ச. நிலையத்திலும் அடைக்கலமாதா தேவாலயத்திலும் மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்திலும் புனித மாகா தேவாலயத்திலும்

# குண்டு வீச்சு

(மன்னார்)

கொண்டச்சி மரமுந்திரிகை பாம் சூழவுள்ள பகுதிகளில் நேற்று சிறிலங்கா விமானப் படையினர் குண்டுவீச்சுத் தாக்குதலை மேற்கொண்டனர்.

# குடும்பத்தலைவர்சுட்டுக்கொலை மனைவி, மகள் மீது வன்முறை

(யாழ்ப்பாணம்)

அந்த வீட்டின் குடும்பத்தலை

# பதுக்கி வைக்காமல் பங்கீடு செய்யுங்கள்

(யாழ்ப்பாணம்)

மக்கள் முன்னணி யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. டொமினிக், கீழ் குறிப்பிடப்படும் பட்டியலை அனுசரித்து நடக்குமாறு அனைத்து வர்த்தகர்களையும் வேண்டிக்கொள்வதோடு, குறித்த விலைக்கு அதிகமாக விற்பவர்கள் மேல் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரித்துள்ளார்.

மேலும் மக்களுக்குத் தேவைப்படும் அத்தியாவசியப் பொருட்களை பதுக்கி வைக்காமல் நியாய விலையில் பங்கீடு செய்து போராட்டத்துக்கு ஒத்துழைக்குமாறும் வர்த்தகர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளால் வரி வசூலிக்கப் படும் பொருட்களின் விற்பனை விலைப்பட்டியல் வருமாறு:

## குளிர்பானம்


| | ஆகக் கூடிய மொ.வி. | வரி | வரியுடன் மொ. விலை | வரியுடன் சில்லறை விலை | குளிரூட்டி சில்லறை விலை |
|---|---|---|---|---|---|
| யானைமார்க் இனிப்பு சோடா | 5.00 | -/50 | 5.50 | 6.00 | 6.50 |
| யானைமார்க் இஞ்சிச் சோடா | 5.50 | -/50 | 6.00 | 6.50 | 7.00 |
| யானைமார்க் பேயாவா | 4.65 | -/50 | 5.15 | 5,65 | 6,15 |
| யானைமார்க் சோடா வாட்டர் | 2.65 | -/50 | 3.15 | 3.65 | 4 15 |
| பெப்சி கோலா | 4 50 | -/50 | 5.00 | 5.50 | 6.00 |
| கொக்கா கோலா | 5 00 | -/50 | 5.50 | 6.00 | 6.50 |
| பன்ரா | 5 00 | -/50 | 5.50 | 6.00 | 6.50 |
| ஸ்பிறைற் | 5.00 | -/50 | 5,50 | 6.00 | 6.50 |
| போற்ரலோ | 5.00 | -/50 | 5.50 | 6.00 | 6.50 |

## சீமெந்து

| | |
|---|---|
| மொத்த விலை | 135.00 |
| வரி | 5 00 |
| வரியுடன் | 140.00 |
| வரியுடன் ஆகக் கூடிய சில்லறை விலை | 145/- |

## சாராயம்

| முக்கியமாகப் பாவனையில் உள்ளவை | ஆகக்கூடிய சாதா. விலை வரிஇல்லாமல் | வரி | வரியுடன் ஆகக்கூடிய விலை | குறிப்பு |
|---|---|---|---|---|
| R. Q. E. S. அதிவிசேட | 85.00 | 15.00 | 100.00 | |
| R. Q. C. தென்னை | 95.00 | 15.00 | 110.00 | |
| வி.ஓ எஸ்.ஏ. | 135.00 | 15.00 | 150.00 | |
| ஓல்ட் அறாக் | 135.00 | 15.00 | 150.00 | |
| டபிள் டிஸ்ரில் (D. D) | 140.00 | 15 00 | 155.00 | |
| பீர் | 42.00 | 7.50 | 49.50 | |
| ஸ்ரவுட் | 45.00 | 7.50 | 52.50 | |
| லங்கா சுப்பர் | 95.00 | 15.00 | 110.00 | |
| மென்டிஸ் ஸ்பெஷல் | 120.00 | 15.00 | 135.00 | |
| கோல்ட் லேபிள் | 105.00 | 15.00 | 120.00 | |
| றெட்லேபிள் | 84.00 | 15.00 | 99.00 | |
| வற் 88 | 95.00 | 15.00 | 110.00 | |
| | | | 97.00 | |



அமரர்

## குமாரசாமி இரத்தினகோபால்

(O. I. C. Department of Highways, Jaffna.)

உயிர்ப்பு- 15-03-1935 உதிர்வு: 05-07-1989

அன்பு மழை பொழிந்தாய், ஆர்வம் தனைவளர்த்தாய்,
இன்ப வடிவாய் இலங்கினாய்! — துன்பக்
கடலாட விட்டுக் கடுகி வழிநடந்தாய்!
உடலோடு போமோ உறவு?

அமரரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

''ரஜதகிரி''
99 (39), ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

மு. கு. இரத்தினகோபால்
குடும்பத்தினர்
(R. 378)

அம்பாறை மாவட்டத்தில் காரைதீவு என்னும் இடத்தில் முப்பத்தைந்து தமிழ்மக்களை இராணுவத்தினர் சுட்டுக் கொன்றதுடன் அதே இடத்தில் மேலும் நான்கு தமிழர்களை வெட்டிக் கிணற்றுக்குள் போட்டுள்ளனர்.

மேலும் நாற்பத்தைந்து தமிழ் இளைஞர்களைக் கைது செய்து தமது முகாம்களுக்கு அழைத்துச் சென்றுள்ளனர் இதுவரை இவ் இளைஞர்கள் பற்றிய விபரம்எதுவும் தெரிய வரவில்லை. (லோ)

சமீபகாலமாக தமிழ் மக்களுக்கு எதிராக ஸ்ரீலங்கா அரசு ஆரம்பித்த போரினால் பெரிதும் பாதிக்கப்பட்ட பகுதிகளான கட்டுவன், மயிலிட்டிதெற்கு, மயிலிட்டி வடக்கு, தையிட்டி, காங்கேசன்துறை, மயிலிட்டி, குரும்பசிட்டி. பலாலி, வசாவிளான் ஆகிய கிராமங்களில் இருந்து தமது வீடுகளை விட்டு வெளியேறிய ஏறக்குறைய 500 குடும்பங்கள் வரை மல்லாகத்தில் தனியார் வீடுகளிலும்பொது நிறுவனங்களிலும் தஞ்சம் புகுந்துள்ளனர். மல்லாகத்தில் குளமங்கால் புனிதசவேரியர் தேவாலயத்திலும் குளமங்கால் றோமன் கத்தோலிக்க பாடசாலையிலும் நீதிமன்ற கட்டடங்களிலும் மல்லாகம் இ.போ.ச. நிலையத்திலும் அடைக்கலமாதா தேவாலயத்திலும் மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்திலும் புனித மாதா தேவாலயத்திலும் கோணப்புலம் வைரவ கோவிலிலும் பல குடும்பங்கள் தங்கியுள்ளன.

இவர்களின்உடனடி தேவையான உணவிற்காக மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் பத்தாயிரம் ரூபா வரை ஒதுக்கியுள்ளது. அரச நிவாரணம் கிடைக்கும் வரை இப்பணத்தை கட்டம் கட்டமாக பொது இடங்களிலுள்ளவர்களுக்கு மாத்திரம் உதவ செலவளிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வைத்திய வசதிக்காகமல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டிடத்தில் இரவு பகல் சேவை ஒன்றை ஆரம்பிக்கவும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

## குண்டு வீச்சு

(மன்னார்)

கொண்டச்சி மரமுந்திரிகை பாம் சூழவுள்ள பகுதிகளில் நேற்று சிறிலங்கா விமானப் படையினர் குண்டுவீச்சுத் தாக்குதலை மேற்கொண்டனர்.

## குடும்பத்தலைவர்சுட்டுக்கொலை மனைவி, மகள் மீது வன்முறை

(யாழ்ப்பாணம்)

கிழக்கு மாகாணப் பகுதியில் கறுவாக்கேணி என்னும் இடத்தில் ஒரு வீட்டிற்குள் புகுந்த இராணுவத்தினர் அந்த வீட்டின் குடும்பத்தலைவரைச் சுட்டுக்கொன்றதுடன் அவரது மனைவியையும் மகளையும் பாலியல் வன்முறைக் குட்படுத்தியுள்ளனர்.

## யாழ். கொழும்பு பஸ் கட்டணம் 600 ரூபா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வதற்கான கட்டணமாக தனியார் வாகனங்கள் பயணிகளிடமிருந்து 600 ரூபாய் வரை அறவிடுவதாகக் கூறப்படுகிறது.

தற்போதைய நெருக்கடி நிலைமையும், எரிபொருள் தட்டுப்பாடுமே இந்தக் கட்டண உயர்வுக்குக் காரணமாக சொல்லப்படுவதுடன் இந்த பஸ்கள் யாவும் கேரதீவு சங்குப்பிட்டி ஊடாக மன்னாரை சென்றடைந்து அங்கிருந்து செல்வதாகவும் கூறப்படுகிறது இந்த வாகனங்கள் கொழும்பைச் சென்றடைய இரண்டு நாட்கள் செல்லுவதாகபயணிகள் தெரிவித்தனர்.

## சாராயம்

| முக்கியமாகப் பாவனையில் உள்ளவை | ஆகக்கூடிய சாதா.விலை வரிஇல்லாமல் | வரி | வரியுடன் ஆகக்கூடிய விலை | குறிப்பு |
|---|---|---|---|---|
| R. Q. E. S. | | | | |
| அதிவிசேட | 85.00 | 15.00 | 100.00 | |
| R. Q. C. | | | | |
| தென்னை | 95.00 | 15.00 | 110.00 | |
| வி.ஓ எஸ்.ஏ. | 135.00 | 15.00 | 150.00 | |
| ஓல்ட் அறாக் | 135.00 | 15.00 | 150.00 | |
| டபிள் டிஸ்ரில் (D. D) | 140.00 | 15.00 | 155.00 | |
| பீர் | 42.00 | 7.50 | 49.50 | |
| ஸ்ரவுட் | 45.00 | 7.50 | 52.50 | |
| லங்கா சுப்பர் | 95.00 | 15.00 | 110.00 | |
| மென்டிஸ் ஸ்பெஷல் | 120.00 | 15.00 | 135.00 | |
| கோல்ட் லேபிள் | 105.00 | 15.00 | 120.00 | |
| றெட்லேபிள் | 84.00 | 15.00 | 99.00 | |
| வற் 88 | 95.00 | 15.00 | 110.00 | |
| பனம் சாரயயம் | | | 97.00 | |
| பவுன் | | 100.00 | | |

## எரிபொருள்

| | |
|---|---|
| டீசல் | 50 சதம் |
| பெற்றோல் | 1.00 ரூபா |

## சிகரட்

| | வரிக்கு முன்மொத்த விலை | வரி | வரியுடன் மொத்த விலை | ஆகக்கூடிய சில்லறை வி. வரியுடன் |
|---|---|---|---|---|
| பிரிஸ்டர் | 1.60 | 10 சதம் | 1.70 | 1.80 |
| திறீறோஸ் | 1.60 | 10 '' | 1.70 | 1.80 |
| கோல்ட்லீவ் | 1.86 | 10 '' | 1.96 | 2.10 |
| மற்றகோன் | 1.86 | 10 '' | 1,96 | 2.10 |
| கப்ஸரன் | 1.64 | 10 '' | 1.74 | 1.85 |


வாடிக்கையாளர்களே.... ❋ நியாய விலையில் ❋ குறித்த தவணைகளில்

சகல மரங்களும் அரிவு வேலை செய்து தருபவர்கள்

# இராசன் அரிவு தொழிற்சாலை

ஐயனார் கோவில் வீதி, (தட்டாதெரு) யாழ்ப்பாணம்.

(B-1401)

### சிந்தனைக்கு

ஒருவன் சேவை செய்வதில் மகிழ்ச்சி அடைந்தால்தான் சேவை என்ற சொல் பொருள் நிறைவு உள்ளதாகும்.

- மகாத்மா காந்தி

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 25-06-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

## நெருக்கடி காலத்தில் சுகாதார சேவை!

வயிற்றுப் பிழைப்புக்காக மட்டும் செய்யும் தொழில் வைத்தியத்தொழில் அல்ல. மனிதாபிமானமும் சேவை மனப்பான்மையும் வைத்தியத்தொழில் செய்பவர்களுக்கு இருக்கவேண்டிய பண்பு.

வைத்தியர்களிடம் இந்தப் பண்பு இருந்தால்தான் அவர்களின் கீழ் பணிபுரியும் தாதிகள், ஊழியர்கள் என்ற சுகாதார சேவையைச் சேர்ந்தவர்களிடமும் மனிதாபிமானமும் சேவைமனப்பான்மையும் வளரமுடியும்.

1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் பின் இலங்கையிலிருந்து குறிப்பாக வடபகுதியிலிருந்து டாக்டர்கள் பலர் வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றுவிட்டனர்; அங்கு சிலர் வைத்தியத்தொழில் செய்கின்றனர்.

இதேசமயம் பிரான்ஸ் நாட்டிலிருந்து சில டாக்டர்கள் இங்கு வந்து சேவை மனப்பான்மையுடனும் மனிதாபிமானத்துடனும் பணியாற்றி மக்களின் பேரபிமானத்தைப் பெற்றிருக்கின்றனர்.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் சிறிலங்கா அரச படைகளுக்கும் விடுதலைப் புலிப் போராளிகளுக்கும் போர் தொடங்கி பதினான்கு நாட்களாகிவிட்டன.

சிறிலங்கா அரச படைகள் தமக்கே உரித்தான மொஸாட்பாணிப் போர்முறையைப் பின்பற்றி முகாமுக்குள்ளிருந்து கண்மூடித்தனமாக மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி ஷெல் அடிப்பதும், ஹெலியிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்வதும் விமானத்திலிருந்து பெட்ரோல் பீப்பாய்களை கீழே உருட்டிவிடுவதும், விமானத்திலிருந்து குண்டு வீசுவதும், கடற்படைப் படகுகளிலிருந்து குடிசனப் பகுதியை நோக்கிக் கண்மூடித்தனமாக பீரங்கித் தாக்குதல்களைத் தொடர்ந்து மேற்கொள்வதும் இரவுபகலாக நடைபெறும் அன்றாட நிகழ்ச்சிகள்.

சிறிலங்கா அரசபடைகளின் இந்த அநாகரிகப் போர் முறையினால் அப்பாவிப் பொதுமக்கள் பலர் இறந்துள்ளனர்; ஊனமுற்றோரும் காயமுற்றோரும் மேலும் பலர்.

தினமும் சிறிலங்கா அரசபடைகளின் தாக்குதல் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது; ஊனமுறுவோரும் காயமுறுவோரும் தினமும் அதிகரித்தே வருகின்றனர்.

இவர்களுக்கு அவசர சிகிச்சையளித்து உயிரைக் காப்பாற்ற வேண்டிய கடமையும் பொறுப்பும் வைத்தியர்களுக்கும் சுகாதார சேவைப் பகுதியினருக்கும் உண்டு!

பதினான்கு தினங்களுக்கு முன்னர் சிறிலங்கா அரசபடைகளுக்கும் விடுதலைப் புலிப்போராளிகளுக்கும் போர் மூண்ட சில தினங்களில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையையும் வவுனியா, மாங்குளம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களிலுள்ள மருத்துவமனைகளும் மூடப்பட்டுவிட்டன.

1987ஆம் ஆண்டு ஜூலை மாதத்துக்கு முன்னர் 1983 ஆண்டிலிருந்து அரசபடைகளுக்கும் போராளிகளுக்கும் போர் நடைபெற்று வந்திருக்கிறது. தேசிய பந்தோபஸ்து

# இனஒதுக்கலுக்குஐ.நா.உதவுவதாக நெல்சன் மண்டேலா கண்டனம்

(நியூயோர்க்)

கறுப்பின மக்களுக்கு எதிராக இன ஒதுக்கலை மேற்கொண்டு வருவோருக்கு ஐக்கிய நாடுகள்சபை உதவி வருவதாக திரு. நெல்சன் மண்டேலா கண்டனம் தெரிவித்துள்ளார்.

இன ஒதுக்கலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்புக்கமிட்டி கூட்டத்தில் பேசும் பொழுதே திரு மண்டேலா இந்தக்கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையில் திரு மண்டேலாவின் முதலாவது உரையாக இது அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது

இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்த சிறப்புக் கமிட்டி பல ஆண்டு காலமாக இன ஒதுக்கல் நடவடிக்கைக்கு எதிராக இயக்கம் நடத்தி வருவதுடன் திரு மண்டேலாவை சிறையிலிருந்து விடுவிக்க வேண்டுமென்றும் செயல் பட்டு வந்தமையும் குறிப்பிடத்தக்கது

ஐ. நா. தலைமையகத்தில் மேற்கொண்ட தமது இந்த முதலாவது உரையில் திரு மண்டேலா தமது நாட்டு வலதுசாரி பயங்கரவாதக் குழுக்களின் போக்குகள் குறித்து எச்சரிக்கை விடுத்ததுடன் ஆபிரிக்க தேசிய காங்கிரசை முற்றாக ஒழித்துக் கட்டுவதே இந்த பயங்கரவாதிகளின் நோக்கம் என்றும் கூறினார்.

தென்னாபிரிக்காவை ஜனநாயகம் நீதி,மற்றும் அமைதி நாடாக மாற்றும் முயற்சியை தாம் அயராது மேற்கொள்ளப்போவதாக கூறிய திரு மண்டேலா இன ஒதுக்கலுக்கு எதிராக தற்பொழுது மேற்குலக நாடுகள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளில் தளர்வு நிலை ஏற்பட்டுவிடக் கூடாது என்ற வேண்டுகோளையும் விடுத்துள்ளார்.

### தமிழ் நாட்டில்

## வன்முறைகளை தடுப்பதே போராளிகள் வெளியேற்றம்

(சென்னை)

தமிழ்நாட்டில் எதிர்பாராத வன்முறைகள் நடக்காது பாதுகாக்கும் நோக்கத்துடனேயே தமிழ்ப் போராளிகளை அங்கிருந்து வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை தாம் மேற்கொண்டு வருவதாக தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

1983ஆம் ஆண்டுக்கு பின்பு தமிழ் நாட்டில் தங்கியுள்ள சகல போராளிகளையும் பற்றி சரியான பரிசீலனையை மேற்கொண்டதின் பின்பே அவர்களை வெளியேற்றுவது குறித்து கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் முதல்வர் தெரிவித்துள்ளார்.

நிருபர்கள் மத்தியில் மேற்கண்டவாறு தெரிவித்த திரு. கருணாநிதி தமிழ் நாட்டின் கடலோரப் பகுதிகளை பாதுகாக்கும் வகையில் கடலோர காவற்படை, கடற்படை என்பவற்றை உடனடியாக அனுப்பி வைக்குமாறு தாம் மத்திய அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் கூறினார்.

## இந்திய - பாகிஸ்தான் எல்லை மூடப்பட வேண்டும்

(ஸ்ரீநகர்)

ஜம்மு காஷ்மீரில் முதலில் அமைதியை நிலை நாட்ட வேண்டும். அதன் பின்னர்தான் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்று பாரதீய ஜனதாக் கட்சிப் பொதுச் செயலாளர் கிருஷ்ணால்லால் சர்மா கேட்டுக் கொண்டார்.

இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணவேண்டுமானால் தேச பக்தர்களின் முழு ஆதரவினை நாம் பெற வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் இவர் குறிப்பிடுகையில் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான எல்லை முற்றாக மூடப்பட்டால்தான் இனிமேலும் பிரச்சினை ஏற்படாமல் தடுக்க முடியும் என்றும் குறிப்பிட்டார்.

### சோவியத்கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து

## பதவிவிலகப்போவதில்லையென மிகெய்ல் கோர்பசேவ் அறிவிப்பு

(மாஸ்கோ)

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து தாம் பதவிவிலகபோவதில்லை என திரு. மிகெய்ல் கொர்பசேவ் அறிவித்துள்ளார்.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மகாநாட்டு இறுதி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் பொழுதே திரு. கொர்பசேவ் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

கட்சிக்குள்ளிருக்கும் பழைமைவாதிகள் திரு. கொர்பசேவின் பொருளாதார சீர்திருத்தக் கொள்கை குறித்து பலமான கண்டனங் ...வித்துள்ளார்.

சோவியத்கம்யூனிஸ்ட் கட்சி மகாநாட்டின போது திரு. கொர்பச்சேவின் பொருளாதார சீர்திருத்தக் கொள்கைக்கு எதிராக பலத்த கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இதேவேளை பொருளாதார சீர்திருத்தக் கொள்கையையும், திட்டங்களையும் தொடர்ந்து எதிர்த்து வருபவரான திரு. ஈவான் பொலஸ்கோ கட்சியின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளதுகுறிப்பிடத்தக்கது

திரு. ஈவான் பொலஸ்கோ கொர்பசேவின் திட்டங்களை

## ஈரானில் மீண்டுமொரு மினி புவி நடுக்கம்!

(தெஹ்ரான்)

பல அழிவுகள் நடந்து முடிந்துள்ள ஈரானின் வடமேற்குப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் மீண்டுமொரு மினி புவி நடுக்கம் ஏற்பட்டதாகவும், இதனால் எஞ்சியிருந்த சில கட்டிடங்கள் சிதைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சுமார் இரண்டு நிமிடங்கள் நீடித்த இந்த புவி நடுக்கமானது ரிச்சர் அளவுகோளில் நான்காக பதிவு செய்யபட்டுள்ளதென கூறப்பட்டது.

இந்த மினி புவி நடுக்கத்தைத் தொடர்ந்து மீட்பு வேலைகளிலும் சில தடைகள் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை ஈரானில் கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற இயற்கை அழிவினால் இறந்தோர் தொகை நாற்பதாயிரத்தை தாண்டி விட்டதெனவும், இந்தத் தொகை மேலும் உயரலாம் என்றும் ஈரானின் அரசு சார்பான செய்தி அறிவித்துள்ளது.

இந்த இயற்கை அழிவுகளை தொடர்ந்து அங்கு தொற்று நோய்கள் ஏற்படாத வகையில் பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறப்பட்டதுடன், பகைமை நாடுகளான ஈராக், பிரிடன், அமெரிக்கா ஆகியவற்றிலிருந்து நிவாரண உதவிகளை பெற்றுக்கொள்வதில் ஈரான் அரசு இணக்கம் கண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## மதசார்பற்ற நாடாக அறிவிக்க வேண்டும்

## கமரூன் முன்னேறிச்செல்கிறது

(ரோம்)

உலகக்கிண்ண உதைபந்தாட்ட 2 ஆம் சுற்று ஆரம்பமாகிவிட்டது. சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டங்களில் கமரூன்கொலம்பியாஅணியை மேலதிக நேரவேளையில் 2-1 என்ற கோல் வித்தியாசத்திலும் செக்கோஸ்லவாக்கியா கோஸ்டாரிக்காவை 4-1 என்ற கோல் வித்தியாசத்திலும் தோற்கடித்துள்ளன.

வென்ற அணிகள் கால் இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெறுகின்றன. தோல்வி கண்ட அணிகள் ஆட்டத்தில் தொடர்ந்து பங்கு பெறும் வாய்ப்பை இழக்கின்றன.

2 ஆம் சுற்று முடிவடையும் போது கால் இறுதிஆட்டத்துக்கு மொத்தம் எட்டு அணிகள் தெரிவு செய்யப் பட்டிருக்கும்.

### இன்றைய ஆட்டங்கள்

ஆட்டம் 'E' அயர்லாந்து -றோமானியா.
ஆட்டம் 'F' இத்தாலி -உருகுவே.

## பிலிப்பைன்ஸில் கடும் புயல்

(பிலிப்பைன்ஸ்)

பிலிப்பைன்ஸில் நேற்று முன் தினம் ஏற்பட்ட கடும் புயலினால் முப்பத்தைந்து பேர் கொல்லப்பட்டதுடன் 85 ஆயிரம் பேர் தமது வீடுகளை விட்டு வெளியேறியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் புயலினால் வெள்ளமும், நிலச்சரிவும் ஏற்பட்டதாகவும் மணிலா செய்திகள் தெரிவித்துள்ளன.

## மிகப்பெரிய ஆடம்பரக்கப்பல்

(டோக்கியோ)

உலகத்திலேயே மிகப்பெரிய ஆடம்பரமான கப்பல் ஒன்றை ஜப்பான் தயாரித்துள்ளது.

ஜப்பானின் மிகப்பெரிய கப்பல் நிறுவனமான 'மிட்சுபிசி' நிறுவனம் இதனை உருவாக்கியது.

'பென்டல் காமனி' என்ற பெயருள்ள இக்கப்பல் 48,000 தொன் நிறையையும் 960 பயணிகளையும் கொள்ள வல்லது.

இக்கப்பலின் மண்டபத்தில் மாபெரும் கோபுரம் ஒன்று களிங்குக் கற்களினால் அமைக்கப்பட்டிருக்கிறது. உட்பகுதிபளில் சிற்பங்கள் சிலவும் செதுக்கப்பட்டுள்ளன.

ஹவாய்க்கு தனது முதல் பயணத்தை மேற்கொள்ள

விமானத்திலிருந்து பெட்ரோல் பீப்பாய்களை கீழே உருட்டிவிடுவதும், விமானத்திலிருந்து குண்டு வீசுவதும், கடற்படைப் படகுகளிலிருந்து குடிசனப் பகுதியை நோக்கிக் கண்மூடித்தனமாக பீரங்கித் தாக்குதல்களைத் தொடர்ந்து மேற்கொள்வதும் இரவுபகலாக நடைபெறும் அன்றாட நிகழ்ச்சிகள்.

சிறிலங்கா அரசபடைகளின் இந்த அநாகரிகப் போர் முறையினால் அப்பாவிப் பொதுமக்கள் பலர் இறந்துள்ளனர்; ஊனமுற்றோரும் காயமுற்றோரும் மேலும் பலர்.

தினமும் சிறிலங்கா அரசபடைகளின் தாக்குதல் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது; ஊனமுறுவோரும் காயமுறுவோரும் தினமும் அதிகரித்தே வருகின்றனர்.

இவர்களுக்கு அவசர சிகிச்சையளித்து உயிரைக் காப்பாற்ற வேண்டிய கடமையும் பொறுப்பும் வைத்தியர்களுக்கும் சுகாதார சேவைப் பகுதியினருக்கும் உண்டு!

பதினான்கு தினங்களுக்கு முன்னர் சிறிலங்கா அரசபடைகளுக்கும் விடுதலைப் புலிப்போராளிகளுக்கும் போர் மூண்ட சில தினங்களில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையையும் வவுனியா, மாங்குளம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களிலுள்ள மருத்துவமனைகளும் மூடப்பட்டுவிட்டன.

1987ஆம் ஆண்டு ஜூலை மாதத்துக்கு முன்னர் 1983 ஆண்டிலிருந்து அரசபடைகளுக்கும் போரளிகளுக்கும் போர் நடைபெற்று வந்திருக்கிறது. தேசிய பந்தோபஸ்து அமைச்சராக இருந்த லலித்அத்துலத்முதலி யாழ். கோட்டையைச் சுற்றி ஆயிரம் மீற்றர் வலயம் பிரகடனப்படுத்தியிருந்ததும் மறந்துவிடக்கூடியவையல்ல!

இந்தக் காலத்திலும் கோட்டைக்குள்ளிருந்து கண்மூடித்தனமாக ஷெல் அடிக்கப்பட்டிருக்கிறது; போதனாவைத்தியசாலை வார்ட்டின் மீதும் விழுந்து சேதமாக்கியிருக்கிறது. நோயாளர் சிலர் காயமடைந்தும் இருக்கிறார்கள்.

அந்த நிலையிலும் கூட யாழ் போதனா வைத்தியசாலை தொடர்ந்து இயங்கிக்கொண்டிருந்தது. ஒரு சில நோயாளிகளே வைத்தியசாலையை விட்டு வெளியேறினர். டாக்டர்கள், தாதிகள், ஊழியர்கள் தொடர்ந்து பணியாற்றினர். அன்றும் கோட்டையிலிருந்து கண்மூடித்தனமாக ஷெல் அடிக்கப்பட்டது. ஹெலியிருந்து துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டது. விமானத்திலிருந்து குண்டு வீசப்பட்டது. பெற்றோல் பீப்பாக்களும் உருட்டப்பட்டன.

இவற்றினால்காயமடைந்தவர்கள் அந்தநெருக்கடியிலும் போதனாவைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்; சிகிச்சையளிக்கப்பட்டனர்.

ஆனால் இன்று இன்னமும் யாழ்ப்பாணத்தில் உக்கிரமான போர் நடைபெறுமுன்பே யாழ். போதனா வைத்தியசாலை வெறிச்சோடிக் கிடப்பதென்றால் எதிர்காலம் எப்படி இருக்கும்?

யாழ். போதனா வைத்தியசாலை மட்டுமல்ல வடக்கிலும் கிழக்கிலுமுள்ள வைத்தியசாலைகள் அனைத்தும் இயங்க வேண்டும், சுகாதாரசேவை சீராகச் செயல்பட்டால்தான் உணவுக் கஷ்டம் ஏற்பட்டாலும் நோயில்லாத சமுதாயம் தப்பிப் பிழைக்க முடியும்!

வாதிகளின் நோக்கம் என்றும் காக்கும் வகையில் கடலோர

## சோவியத்கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து

# பதவிவிலகப்போவதில்லையென மிகேய்ல் கோர்பசேவ் அறிவிப்பு

(மாஸ்கோ)

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து தாம் பதவிவிலகபோவதில்லை என திரு. மிகெய்ல் கொர்பசேவ் அறிவித்துள்ளார்.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மகாநாட்டு இறுதி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றும் பொழுதே திரு. கொர்பசேவ் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

கட்சிக்குள்ளிருக்கும் பழைமைவாதிகள் திரு. கொர்பசேவின் பொருளாதார சீர்திருத்தக் கொள்கை குறித்து பலமான கண்டனங்கள் தொடுத்திருந்ததும், அதனைத் தொடர்ந்து தாம் மேற்படி கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து விலகிக் கொள்ளப் போவதாகவும் அறிவித்திருந்ததும் அறிந்ததே.

இருந்தும் தற்பொழுது தாம் பதவி விலகப்போவதில்லை என்று அறிவித்துள்ளமையானது அவருக்கு ஏற்பட்டுள்ள மனமாற்றத்தினை தெளிவுபடுத்துவதாக அமைந்துள்ளதென அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகின்றது.

தாம் பதவி விலகப்போவதில்லை என்று அறிவித்துள்ள திரு. கொர்பசேவ் கட்சியின் ஐக்கியம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்துள்ளதுடன் ஜனாதிபதி-பொதுச் செயலாளர் பதவிகள் வெவ்வேறாக மாற்றி அமைக்கப்படல் வேண்டுமென்றும் அறிவித்துள்ளார்.

சோவியத்கம்யூனிஸ்ட் கட்சி மகாநாட்டின போது திரு. கொர்பச்சேவின் பொருளாதார சீர்திருத்தக் கொள்கைக்கு எதிராக பலத்த கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இதேவேளை பொருளாதார சீர்திருத்தக் கொள்கையையும், திட்டங்களையும் தொடர்ந்து எதிர்த்து வருபவரான திரு. ஈவான் பொலஸ்கோ கட்சியின் புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளதுகுறிப்பிடத்தக்கது

திரு. ஈவான் பொலஸ்கோ கொர்பசேவின் திட்டங்களை எதிர்த்து வந்த போதும், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராக அவரே இருக்க வேண்டுமென்று வலியுறுத்தியுள்ளதுடன்; அவர் தொடர்ந்து பதவியில் இருக்க தமது ஆதரவு முழுமையாக கிடைக்குமென்றும் உறுதியளித்துள்ளார்.

## 22 பேர் பலி!

எகிப்துநாட்டின் தலைநகரான கெய்ரோவில் இடம்பெற்ற வாகன விபத்தொன்றில் பதினைந்துபெண்கள் உட்படஇருபத்திரண்டுபேர்கொல்லப்பட்டுள்ளார்கள். பதினைந்துபேர் பலத்த காயமடைந்தார்கள்.

கனரக வாகனமொன்றும் பஸ் ஒன்றும் மோதிக்கொண்டதை அடுத்தே இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(தெஹ்ரான்)

பல அழிவுகள் நடந்து முடிந்துள்ள ஈரானின் வடமேற்குப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் மீண்டுமொரு மினி புவி நடுக்கம் ஏற்பட்டதாகவும், இதனால் எஞ்சியிருந்த சில கட்டிடங்கள் சிதைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சுமார் இரண்டு நிமிடங்கள் நீடித்த இந்த புவி நடுக்கமானது ரிச்சர் அளவுகோளில் நான்காக பதிவு செய்யடபட்டுள்ளதென கூறப்பட்டது.

இந்த மினி புவி நடுக்கத்தைத் தொடர்ந்து மீட்பு வேலைகளிலும் சில தடைகள் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை ஈரானில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இயற்கை அழிவினால் இறந்தோர் தொகை நாற்பதாயிரத்தை தாண்டி விட்டதெனவும், இந்தத் தொகை மேலும் உயரலாம் என்றும் ஈரானின் அரசு சார்பான செய்தி அறிவித்துள்ளது.

இந்த இயற்கை அழிவுகளை தொடர்ந்து அங்கு தொற்று நோய்கள் ஏற்படாத வகையில் பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறப்பட்டதுடன், பகைமை நாடுகளான ஈராக், பிரிட்டன், அமெரிக்கா ஆகியவற்றிலிருந்து நிவாரண உதவிகளை பெற்றுக்கொள்வதில் ஈரான் அரசு இணக்கம் கண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## மதசார்பற்ற நாடாக அறிவிக்க வேண்டும்

(காட்மண்ட்)

நேபாளத்தை சமய சார்பற்ற நாடாக மாற்றவேண்டும் என்று அந்நாட்டின் பௌத்த மதத்தை சேர்ந்த முப்பத்திரெண்டு குழுக்கள் கூட்டாக இணைந்து கோரிக்கை விடுத்துள்ளதுடன் பேரணியும் நடத்தியுள்ளனர் இந்தப்பேரணியில் பத்தாயிரத்துக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டதாக அறிவிக்கப்பட்டது. நேபாளத்தை இந்து நாடு என்று அண்மையிலேயே சட்டரீதியாக அறிவிக்கப்படலாயிற்று. அரசின் இந்த அறிவிப்பைத் தொடர்ந்தே பௌத்தர்களின் இந்த எதிர்ப்பு உருவாகியுள்ளது.

ஒரு கோடியே 85 இலட்சம் மக்களை உள்ளடக்கிய நேபாளத்தில் 90 வீதமானோர் இந்துக்களாவார் பெரும் எண்ணிக்கையை கொண்ட இந்துக்கள் புதிதாக உருவாக்கப்படவுள்ள சட்டத்திலும் நேபாளத்தை இந்து நாடு என்றே பிரகடனப்படுத்த வேண்டும் என்று உறுதியுடன் உள்ளதாக கூறப்படுகின்றது. இந்த புதிய சட்ட உருவாக்கத்தை தொடர்ந்தே இந்த வாத பிரதிவாதங்கள் எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது

தலைநகர் காட்மண்டில் ''இந்து நாடு'' என்ற பிரகடனத்துக்கு எதிராக பேரணி நடத்திய பௌத்தர்கள் ''மதத்தின் பெயரால் நடத்தப்படும் சுரண்டல் நிறுத்தப்படல் வேண்டும்,'' என்று கோஷம் எழுப்பியதுடன் தமது வேண்டுகோள் குறித்து மகஜர் ஒன்றையும் நேபாள அரசுக்கு கையளித்ததாக தெரிவிக்கப்பட்டது.

இந்துக்கள் அல்லாதோர் மீண்டுமோர் எதிர்ப்பு ஊர்வலத்தை நடத்த ஏற்பாடு செய்து வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மிகப்பெரிய ஆடம்பரக்கப்பல்

(டோக்கியோ)

உலகத்திலேயே மிகப்பெரிய ஆடம்பரமான கப்பல் ஒன்றை ஜப்பான் தயாரித்துள்ளது.

ஜப்பானின் மிகப்பெரிய கப்பல் நிறுவனமான 'மிட்சுபிசி' நிறுவனம் இதனை உருவாக்கியது.

'பென்டல் காமனி' என்ற பெயருள்ள இக்கப்பல் 48,000 தொன் நிறையையும் 960 பயணிகளையும் கொள்ள வல்லது.

இக்கப்பலின் மண்டபத்தில் மாபெரும் கோபுரம் ஒன்று களிங்குக் கற்களினால் அமைக்கப்பட்டிருக்கிறது. உட்பகுதியில் சிற்பங்கள் சிலவும் செதுக்கப்பட்டுள்ளன.

ஹவாய்க்கு தனது முதல் பயணத்தை மேற்கொள்ள இருக்கிறது.

## அரச அதிபர் கார் சேதம்

(கிளிநொச்சி)

ஷெல் தாக்குதலுக்கும், விமானக் குண்டுத் தாக்குதலுக்கும் கிளிநொச்சி அரசாங்க அதிபரின் உத்தியோக பூர்வ கார் கூடத் தப்பவில்லை.

கிளிநொச்சி கச்சேரி தாக்கப்பட்டபோது கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க மாணிக்கவாசகரின் காரும் பலத்த சேதத்திற்குள்ளானது

கார் பலத்த சேதத்திற்குள்ளானதால் அரசாங்க அதிபர் சைக்கிளிலும், கால்நடையாகவும் சென்றே தமது கடமையைச் செய்யும் பரிதாப நிலைக்குள்ளானார் (49)

# வடபகுதியில் ஐந்து மருத்துவ மனைகள் புதனன்று திறக்கப்படும்

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் முயற்சி உணவு மருந்துப்பொருள் தருவிக்க ஏற்பாடு

யாழ்.போதனா ஆஸ்பத்திரி உட்பட வட மாகாணத்தில் தற்போது மூடப்பட்டுள்ள ஐந்து பிரதான ஆஸ்பத்திரிகளையும் எதிர்வரும் புதன்கிழமை(27 . 6 .90) இலிருந்து செயல்படவைப்பதற்கான நடவடிக்கைகள் அரசாங்க உயர் மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### உணவு, மருந்து அனுப்ப முயற்சி

யாழ். மாவட்டத்தில் பல முக்கிய இடங்களைச் சுற்றிப் பார்வையிட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுத் தலைவர் டாக்டர் பிலிப் கொன்ரெஸ்ரா விரைவில்இங்கு மருந்துப் பொருட்களையும், அத்தியாவசிய உணவுப் பொருட்களையும் அனுப்பி வைப்பதற்கான முயற்சியில் தற்போது ஸ்ரீலங்காஅரசின் உயர்மட்டத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்திவருகிறார்.

யாழ்ப்பாண விஜயத்தின் போது வடக்குக் கிழக்கில் மொத்தம் 320 முகாம்களில் 3 இலட்சத்து 80ஆயிரம் தமிழ்ப் பேசும் மக்கள் தங்கள் வீடு வாசல்களை விட்டு வெளியேறி அகதிகளாகத் தஞ்சம் புகுந்துள்ளனர் என்பதை டாக்டர் கொன்ரெஸ்ரா அறிந்து கொண்டார். யாழ். போதனா வைத்தியசாலை மாத்திரமின்றி வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மாங்குளம் ஆஸ்பத்திரிகளும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மூடப்பட்டுள்ளன என்பதையும் கடந்த பத்து நாட்களாக மருந்துப் பொருள் உட்பட எதுவித உணவுப் பொருட்களும் இங்கு அனுப்பி வைக்கப்படவில்லை என்பதையும் இவர் அவதானித்துக் கொண்டார்.

யாழ்ப்பாணம் தவிர்ந்த முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி ஆகிய வன்னி மாவட்டங்களில் இடம் பெயர்ந்தோர் எதிர்நோக்கும் கஷ்டங்களை அக்கறையுடன் கேட்டு அறிந்து கொண்ட இவர், இம்மக்களின் துயரைப் போக்குவதில் சிரத்தை காண்பித்ததாகவும் தெரியவருகிறது.

தற்போதைய சூழ்நிலையில் இம்மாவட்டங்களில் உள்ள அரசாங்க சார்பற்ற தொண்டர் ஸ்தாபனங்கள் இணைந்து செயல்பட்டு மக்களின் கஷ்டங்களைப் போக்கவேண்டுமெனவும் இவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

நிவாரண வேலைகள் இங்கு நடைபெறும் விதத்தை அவதானித்த பின்னர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இப்பிராந்தியத்தில் மாவட்டரீதியாக செயல்படுவதே நிலைமையை சமாளிக்க உகந்தது என்று டாக்டர் கொன்ரெஸ்ரா அபிப்பிராயப்பட்டார்.

நேற்றுக்காலை இங்கிருந்து பலாலி ஊடாக விமானப் படை விமானத்தில் கொழும்பு சென்ற சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி தற்போது அரசின் உயர்மட்ட பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார். (75)

# யாழ். 500 அகதிகள் கௌதாரி முனையில்

(கிளிநொச்சி)

யாழ்ப்பாணத்து அகதிகளில் 500க்கும் அதிகமானவர்கள் பூநகரி கௌதாரி முனை என்னுமிடத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் கோட்டை முகாமிலிருந்து ஷெல் அடிக்கப்பட்டதனாலும் விமானக் குண்டுவீச்சினாலும் பாதிக்கப்பட்ட குடும்பங்களே இங்கு தஞ்சமடைந்துள்ளன.

யாழ். கரையோரப் பகுதிகளான கொழும்புத்துறை, குருநகர், கரையூர், பாசையூர், சின்னக்கடைப் பகுதிகளைச் சேர்ந்தவர்களே இங்கு கூடுதலாக வந்து தஞ்சமடைந்துள்ளனர்.

அங்கு தங்கியுள்ளவர்களுக்கு, எந்த விதமான பொது ஸ்தாபனங்களும் இதுவரை உதவ முன்வரவில்லையாம்.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க. மாணிக்கவாசகர், மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ் அமிர்தலிங்கம், விடுதலைப் புலிகளின் கிளிநொச்சி மாவட்ட அரசகூட்டுத்தாபன இணைப்பாளர் திரு.எம்,ஜி. சிவபாதம் ஆகியோர் மேற்படி பாடசாலைக்குச் சென்று அகதிகளைப் பார்வையிட்டு ஆறுதல் கூறிச் சென்றதுடன், அவர்களுக்கு ஒரு வாரத்திற்கான உணவுப் பொருட்களை வழங்க நடவடிக்கை எடுத்து வருகின்றனர். (49)

Registered as a News Paper at the G. P. O.

# ஈழநாதம்

## அரிசி ஏற்ற வருமாறு அழைப்பு!

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் துறையிலிருந்து அரிசி கொண்டு வருவதற்காக கூட்டுறவுச் சங்கங்கள் தமது லொறிகளுடனும் கூலியாட்களுடனும் இன்று காலை தெல்லிப்பளைக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளன.




# ஆயிரக்கணக்கில் முல்லைத்தீவு வந்துகுவியும் அகதிகள்

## உண்ணஉணவில்லை; உடுக்க உடையில்லை! யாழ்; வருவதற்கு வாகனமும் இல்லை!

(யாழ்ப்பாணம்)

திருக்கோணமலையிலிருந்து காடுகளுக்கு ஊடாகவும் கடல் மார்க்கமாகவும் முல்லைத்தீவில் வந்து குவியும் அகதிகளில் பெரும்பாலானோர் யாழ்ப்பாணத்திற்கு வர வாகன வசதியோ மாற்று உடையோ இன்றி அவதிப்படுவதாக அவர்களை நேரில் பார்த்துவந்த செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் தெரிவிக்கிறார்கள்.

மட்டக்களப்பு, திருமலை வவுனியா ஆகிய மாவட்டங்களிலிருந்துமுல்லைத்தீவுக்கடற்கரையில் வந்து இறங்கும் பல்லாயிரக்கணக்கானஅகதிகளை ஏற்று தங்க வைப்பதற்கு முல்லைத்தீவு வாசிகளால் இயலாதிருக்கிறது. முல்லைத்தீவில் ஏற்கனவே வசித்துவரும் மக்களின் தொகையிலும் கூடுதல் எண்ணிக்கையானோர் அகதிகளாக வந்து சேர்வதால் அவர்களை முல்லைத்தீவு வாசிகளால் ஏற்றுஅங்கு தங்கவைக்க முடியாதிருக்கிறது என்றும் செஞ்சிலுவைச்சங்கவட்டாரங்கள் தெரிவித்தன. முல்லைத்தீவு நகரில் மாத்திரம் சுமார் ஆறாயிரம் அகதிகள் வந்துள்ளனர். முல்லைத்தீவுமாவட்ட வைத்தியசாலையும் மூடப்பட்டிருப்பதால் இவர்களது மருத்துவ வசதிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றன.

**வாகனங்கள் இல்லாமல் அவதி**

யாழ்ப்பாணத்திலிருந்து வாகனங்களை அனுப்பி இவர்களை இங்கு வரவழைத்தால் அன்றி பல்வேறு தொற்று நோய்களுக்கும் இவர்கள் ஆளாகலாம் என்று அஞ்சப்படுகிறது.

மாற்று உடைபோன்ற அத்தியாவசியப் பொருட்களை அல்லதுஏதாவது பெட்டிகளை எடுத்து வருவோரைக் கண்டால் இராணுவத்தினரும் சிங்களக் காடையர்களும் வழிமறித்து தாக்குவதும் வெளியேற விடாது தடுத்து வைப்பதுமாக இருப்பதால் எதனையும் கொண்டுவராமல் இடம் பெயர்வதுபோல் காட்டிக் கொள்ளாமல் ஓடிவந்ததாக அகதிகள்தெரிவித்தார்களாம். (75)

## தீவுப்பகுதியில் அகதிகள் அதிகரிப்பு அத்தியாவசிய தேவைகள் பற்றாக்குறை

(வேலணை)

காரைநகரில் இருந்து ஏவப்பட்ட ஷெல் தாக்குதல்களின் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட ஊர்காவற்றுறை பட்டின மக்களும் கரையோரங்களில் உள்ள மக்களும் அகதிகளாக புகலிடம் தேடி நாரந்தனை சம்பேதுறுவானவர் ஆலயம், சுருவில் றோமன் கத்தோலிக்க பாடசாலை, சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம், வேலணை சாட்டி மாதா கோவில் ஆகியவற்றிலும் யாழ்-கோட்டையில் இருந்து ஏவப்பட்ட ஷெல் தாக்குதல்களினால் பாதிக்கப்பட்ட குருநகர், நாவாந்துறை, மண்டைதீவு ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாசாலை சென். மேரிஸ் கிறீஸ்தவ ஆலயம், வேலணை சாட்டி மாதா கோவிலிலும், நெடுந்தீவு, நயினாதீவுக்குச் செல்வதற்காக சென்ற 16ஆம் வேலணை உதவி அரசாங்க அதிபர் ஊடாகவும் தீவுப்பகுதி சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படைப் பிரிவினரின் அனுசரணையுடன் செய்ய முன்வந்துள்ளது.

தீவுப்பகுதியில் அகதிகளாக இதுவரை சுமார் ஐயாயிரம் பேருக்கு மேல் இருப்பதுடன் நாளாந்தம் இத்தொகை அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

கடந்த (10) பத்துத் தினங்களுக்கு மேலாக தீவுப் பகுதிக்கான மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டிருக்கின்றது. எரிபொருட்களின் தட்டுப்பாடுகளும் இங்கு கிடைப்பது வர வர அதிகரித்துள்ளன.

ஊர்காவற்றுறையில் இயங் வந்த மாவட்ட அரசினர் வைத்தியசாலையும் தற்காலிகமாக வேலணை கிராமிய வைத்தியசாலையுடன் இணைக்கப்பட்டதால் இங்கும் நோயாளர்களின் தொகையும் அதிகரித்துள்ளது மருந்து வகைகளுக்கும் பலத்த தட்டுப்பாடுகளும் நிலவி வருகின்றன.

பொருட்களின் தட்டுப்பாடுகள் அதிகரித்திருப்பதை சாட்டி பல வர்த்தகர்கள் பொருட்களின் விலைகளை கூட்டி விற்பனை செய்து வருகின்றனர். இவ்வாறு விற்ற சில வர்த்தகர்கள் விசாரனைகளுக்குட்படுத்தப்பட்டுள்ளனர். தீவுப்பகுதியில் தங்கியுள்ள அகதிகளுக்கும் இலங்கை றெட்பாண நிறுவனமும் பல உதவிகளை செய்து கொடுப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (14)

## இன்று ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பிரிவைச்சேர்ந்த வட்டவை உறுப்பினர்களுக்கான தற்கால நிலைமை பற்றிய ஆலோசனைக் கூட்டம் இன்று பிற்பகல் 3 30 மணியளவில் உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது என்று வலிகாமம் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் தெரிவித்தார்.

இக்கூட்டத்திற்கு வட்டவை உறுப்பினர்கள்அனைவரையும் வட்டவைப் பொறுப்பாளர்களையும் தவறாது கலந்து கொள்ளும்படியும் இவர்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

## நல்லூர், உடுவில் உதவி அரச அதிபர் பிரிவில் 2,500 குடும்பங்கள் தஞ்சம்

(கதுமலை)

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சுமார் ஆயிரம் குடும்பங்களும், உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சுமார் ஆயிரத்தி ஐநூறு குடும்பங்களும் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர்.

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த அரியாலை கிழக்கு முனங்கு, திருநெல்வேலி தலங்காவல் பிள்ளையார் கோயில் வண்ணார்பண்ணை வடமேற்கு வராலி அம்மன் கோயில், கொக்குவில் கிழக்கு ஆகிய இடங்களிலும், உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த தாவடி, இணுவில், சுன்னாகம் சென். அன்ரனீஸ் தேவாலயம், சுன்னாகம் கதிரமலைசிவன் கோயில் ஆகிய இடங்களிலும் இந்த 2500 குடும்பங்களும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

நல்லூர் உ. அ. அதிபர் பிரிவிலுள்ள அகதிகளுக்கு நல்லூர் ப. நோ. கூ. சங்கமூலம் ஒரு வார கால உணவுப் பொருட்களை உதவி அரசாங்க அதிபர் திரு ஆ. மகாலிங்கம் தனது சக உத்தியோகஸ்தர்களின் உதவியுடன் பெற்றுக் கொடுத்துள்ளார்.

சுன்னாகம் ப. நோ. கூ. சங்கத்தில் உணவுப் பொருட்கள் கையிருப்பில் இல்லாததினால் தெல்லிப்பளை, ப.நோ. கூ. சங்கத்தில் இருப்பில் இருக்கும் உணவுப் பொருட்களை கடனாகப் பெற்று உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள அகதிகளுக்கு வழங்க தான் எடுத்த முயற்சி பயனளிக்கவில்லை என்று கவலை தெரிவித்த உதவி அரசாங்க அதிபர், இன்னும் இரண்டொரு தினங்களுக்குள் உணவுப் பொருட்களைப் பெற்றுத்தருவதாக உதவி உணவு ஆணையாளர் நம்பிக்கை தெரிவித்ததாகச் சொன்னார். (19)

## கொழும்பு வந்தோரை சொந்த மாகாணங்களுக்கு அனுப்ப நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு – கிழக்கு மாகாணங்களிலிருந்து கொழும்புக்கு வந்து திரும்பமுடியாத தமிழ், முஸ்லிம் மக்களிடமிருந்து பல கோரிக்கைகள் தமக்கு வந்துள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் செரிந்தரத்வத்தை தெரிவித்தார்.

அடுத்த இருபத்தி நான்கு மணி நேரத்தில் இவர்கள் சொந்தஇடங்களுக்குத்திரும்புவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாலு அல்லது ஐந்து வாகனங்களில் இவர்களை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உணவுப் பொருட்களை அனுப்பவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் அவர் சொன்னார்.

## செட்டிகுளம், பாவற்குளத்திலிருந்து

## திட்டங்களைப் பார்வையிட்டனர்

(கொழும்புத்துறை)

அமெரிக்க உதவி நிறுவனத்தின் பொறியியலாளர்கள் யாழ். கமநலசேவை வேலைத் திட்டங்களைப் பார்வையிடு

## தமிழர்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## கிளிநொச்சி

## மாணவர் உணவு

அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட ஊர்காவற்றுறை பட்டின மக்களும் கரையோரங்களில் உள்ள மக்களும் அகதிகளாக புகலிடம் தேடி நாரந்தனை சம்பேதுறுவானவர் ஆலயம், சுருவில் றோமன் கத்தோலிக்க பாடசாலை, சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம், வேலனை சாட்டி மாதா கோவில் ஆகியவற்றிலும் யாழ்-கோட்டையில் இருந்து ஏவப்பட்ட ஷெல் தாக்குதல்களினால் பாதிக்கப்பட்ட குருநகர், நாவாந்துறை, மண்டைதீவு ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாசாலை செண். மேரிஸ் கிறீஸ்தவ ஆலயம், வேலனை சாட்டி மாதா கோவிலிலும், நெடுந்தீவு, நயினாதீவுக்குச் செல்வதற்காக சென்ற 16ஆம் திகதி குறிகாட்டுவானுக்குச் சென்ற மக்கள் அகதிகளாக புங்குடுதீவு, பெருங்காடு, குறிகாட்டுவான் ஆகிய இடங்களிலும் அகதிகளாக தங்கியுள்ளனர். இதே நேரத்தில் யாழ்ப்பாணம், கொட்டடியைச் சேர்ந்த பெருந்தொகையான மக்களும் தங்களது வீடுவாசல்களை இழந்த நிலையிலும் வேலணைப் பகுதியில் அகதிகளாகத் தங்கியுள்ளனர் இவர்களுக்கு வேண்டிய மருத்துவ உதவிகளை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை

பிரிவினரின் அனுசரணையுடன் செய்ய முன்வந்துள்ளது.

தீவுப்பகுதியில் அகதிகளாக இதுவரை சுமார் ஐயாயிரம் பேருக்கு மேல் இருப்பதுடன் நாளாந்தம் இத்தொகை அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

கடந்த (10) பத்துத் தினங்களுக்கு மேலாக தீவுப் பகுதிக்கான மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டிருக்கின்றது. எரிபொருட்களின் தட்டுப்பாடுகளும் இங்கு கிடைப்பது வர வர அதிகரித்துள்ளன.

ஊர்காவற்றுறையில் இயங் வந்த மாவட்ட அரசினர் வைத்தியசாலையும் தற்காலிகமாக வேலணை கிரா

ந்து வகைகளுக்கும் பலத்த தட்டுப்பாடுகளும் நிலவி வருகின்றன.

பொருட்களின் தட்டுப்பாடுகள் அதிகரித்திருப்பதை சாட்டி பல வர்த்தகர்கள் பொருட்களின் விலைகளை கூட்டி விற்பனை செய்து வருகின்றனர். இவ்வாறு விற்ற சில வர்த்தகர்கள் விசாரனைகளுக்குட்படுத்தப்பட்டுள்ளனர். தீவுப்பகுதியில் தங்கியுள்ள அகதிகளுக்கும் இலங்கை றெட்பாண நிறுவனமும் பல உதவிகளை செய்து கொடுப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (14)

## செட்டிகுளம், பாவற்குளத்திலிருந்து

# ஆறு டி[illegible]ாக்ரர்களில் யாழ். நோக்கி வரும் அகதிகள்

(யோகபுரம்)

வவுனியா பாவற்குளம், செட்டிக்குளம் பகுதியில் இருந்து ஆறு டிராக்ரர் வாகனங்களில் பெரும் தொகையான அகதிகள் பெண்கள் பாலர் உட்பட வவுனிக்குளம் ஊடாகயாழ்ப்பாணம்நோக்கி வருகின்றனர்.

சிங்களக் காடையர் கூட்டம்கூட்டமாக அனுராதபுரம் மதவாச்சி ஊடாக நுழைந்து வெட்டுவதும் இராணுவ உதவியுடன் கொள்ளை, கொலைகளில் ஈடுபடுவதனாலும் தொடர்ந்தும் சிங்களக் காடையரின், இராணுவத்தினரின் அட்டகாசத்தின்மத்தியில் குடியிருக்க முடியாதநிலையில் வெளியேறிக் கொண்டிருப்பதாக இவர்கள்தெரிவித்தனர். (60)

# மக்கள் வெளியேறினாலும் சங்கக்கடை காத்திருக்கிறது

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமைச் சுற்றிலும் உள்ள கிராமங்களிலிருந்து மக்கள் இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடங்களுக்குச் சென்ற போதிலும் குரும்பசிட்டிக் கூட்டுறவுக்கடை (கிளை இல. 17) தொடர்ந்தும் அவ்விடத்திலேயே இயங்கி வருகிறது.

மக்கள் தமக்குத் தேவையான உணவுப் பொருட்களை பெற்றுக்கொள்ள வசதியாக தாங்கள் தொடர்ந்தும் கடையைத் திறந்து வைத்திருப்பதாக மேற்படி கூட்டுறவுக் கடையின் முகாமையாளர் கூறினார்.

வசதிஉள்ளவர்கள் பொருட்களை வேறு கடைகளில் வாங்கினாலும் உணவு முத்திரைகளை வைத்திருப்போர் வேறு கடைகளை நாட முடியாததால் தாம் கடையை மூட விரும்பவில்லை என்றும் அவர் மேலும் கூறினார். (75)

# பலாலி ஷெல்; கோயில் சேதம்!

வசாவிளான் மானம்பிராய் பிள்ளையார் கோயில் மூலஸ்தானம் ஷெல் தாக்குதலால் இடிந்து சேதமடைந்துள்ளது. நேற்று பலாலி முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள் வசாவிளான் சந்திக்கு அருகில் அமைந்துள்ள இக்கோயிலின் மூலஸ்தானம் பீது வ்ழுந்ததால் கூரையும் நொருங்கியுள்ளதுடன் உட்பிரகாரமும் சேதமடைந்துள்ளது. (95)

### எரிபொருள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி எரிபொருள் நிரப்பு நிலையமும் இதே கதியில் தான் உள்ளது. அங்கிருந்து எரிபொருள்களை எடுக்க இராணுவத்தினர் அனுமதிக்கவில்லையாம். (75)

### இராணுவம்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த மக்கள் இராணுவத்தினரின் ஷெல் தாக்குதல்களுக்கு உட்படாத வகையில் வீடுகளை விட்டு வெளியேறி விட்டதாகவும் இதில் பலர் குடாநாட்டுப் பகுதிக்கு வந்து விட்டதாகவும் அச் செய்திகளில் இருந்துதெரியவருகிறது

# யாழ். பல்கலைக்கழக மாணவர் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாண[illegible])

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கலை, விஞ்ஞான, மருத்துவ பீட மாணவர்களுக்கான பொதுக்கூட்டம் நாளை 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

தற்போதைய நிலைமைகளால் இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் மற்றும் உதவிகள் மேற்கொள்வது குறித்து இங்கு ஆராயப்படவுள்ளதால் சகல மாணவர்களையும் சமுகம் தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# மா அனுப்ப நடவடிக்கையாம்

(கொழும்பு)

திருக்கோணமலை பிறிமா மா ஆலையிலிருந்து போதிய அளவு கோதுமை மாவை காங்கேசன்துறைக்கும் கொழும்புக்கும் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்து உள்ளது.

றிய ஆலோசனைக் கூட்டம் இன்று பிற்பகல் 3 30 மணியளவில் உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது என்று வலிகாமம் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் தெரிவித்தார்.

இக்கூட்டத்திற்கு வட்டவை உறுப்பினர்கள்அனைவரையும் வட்டவைப் பொறுப்பாளர்களையும் தவறாது கலந்து கொள்ளும்படியும் இவர்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

# திட்டங்களைப் பார்வையிட்டனர்

(கொழும்புத்துறை)

அமெரிக்க உதவி நிறுவனத்தின் பொறியியலாளர்கள் யாழ். கமநலசேவை வேலைத் திட்டங்களைப் பார்வையிடுவதற்காக யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

இக்குழுவினர் புனர்வாழ்வுத் திட்டங்கள், புனரமைப்புகள் ஆகியன பற்றிவிரிவாக ஆராய்ந்தனர்.

இத்திட்டங்கள் கூடியவிரைவில்நடைமுறைப்படுத்தவேண்டுமென்றும், இத்திட்டங்களை நடைமுறைப்படுத்தக் கஷ்டங்கள் இருப்பின்அதற்காகவேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதாகவும் அவர்கள் விளக்கமாகக் கூறினார்கள். (24)

### கண்ணிவெடி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருந்த தமது வாகனங்களுக்கும் முகாமுக்கும் தீ வைத்துச் சென்றுள்ளனர்.

இதேவேளை குச்சவெளி இராணுவ முகாம் தொடர்ந்தும் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கிறது.

### ஷெல்தாக்குதலில்

(1ஆம் பக்க தொடர்ச்சி)

யில் சிகிச்சை பெற்று யாழ். கோட்டை இராணுவ முகாமில் இருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்கள் காரணமாக வெளியேறிய கடும் சுகயீனமுள்ள நோயாளர்களும் மானிப்பாய் யாழ். போதனா வைத்தியசாலைப் பிரிவுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள்.

நோயாளிகளை கவனிப்பதற்கு டாக்டர்களுக்கும் தாதிமார்களுக்கும் உதவியாக செஞ்சிலுவைச் சங்கத்தினரும், சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவினரும் செயல்பட்டு வருகிறார்கள்.

நோயாளிகள் தாம் பெற்றுக் கொள்ளும் சிகிச்சையில் பூரணதிருப்தி அடைவதாகவும் தமக்கு சிகிச்சை அளிப்பதற்காக கூட்டாகச் செயல்படும் அனைவரையும் தாம் பாராட்டுவதாகவும் ஈழநாதத்திற்கு தெரிவித்தார்கள். (19)

அரியாலை கிழக்கு முனங்கு, திருநெல்வேலி தலங்காவல் பிள்ளையார் கோயில் வண்ணார்பண்ணை வடமேற்கு வராலி அம்மன் கோயில், கொக்குவில் கிழக்கு ஆகிய இடங்களிலும், உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த தாவடி, இணுவில், சுன்னாகம் செண். அன்ரனீஸ் தேவாலயம், சுன்னாகம் கதிரமலைசிவன் கோயில் ஆகிய இடங்களிலும் இந்த 2500 குடும்பங்களும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

நல்லூர் உ. அ. அதிபர் பிரிவிலுள்ள அகதிகளுக்கு நல்லூர் ப. நோ. கூ. சங்கமூலம் ஒரு வார கால உணவுப்

### தமிழர்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருச்சியில் நிருபர்கள் மத்தியில் பேசும் போதே பாண்டியன் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளதுடன் இலங்கையில் நிகழும் சம்பவங்களை உள்நாட்டுப் பிரச்சினைகள் என்று வெறுமனே இருந்து விட முடியாது என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கைத் தமிழர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதுடன் அவர்களின் உரிமைகளை பெற்றுக் கொடுக்கும் அடிப்படையில் இந்தியா நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கூறியதுடன், கச்சதீவில் தமிழக மீனவர்கள் தங்கி தொழில் நடத்துவதுடன் விழாக்கள் நடத்துவதற்கும் இந்தியக் கடற்படை பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

### பீரங்கித்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

காணை சிவப்பிரகாச மகா வித்தியாலயம், விக்ரோறியாக் கல்லூரி, கலாசார மண்டபம், நீதிமன்றக் கட்டிடம் ஆகிய இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள், சிலர் தனியார் வீடுகளிலும் தஞ்சமடைந்துள்ளனர். சகல கிராமசேவையாளர்கள், வெளிக்கள உத்தியோகஸ்த்தர்கள், பட்டதாரி பயிலுனர்கள் உதவி அரசாங்க அதிபர் பணிமனையூடாக துரிதமாக செயல்பட்டு இவர்களுக்கு ஒரு வாரகாலத்திற்கு தேவையான உலர் உணவுப் பொருட்களைச் சங்கானைப் ப. நோ. கூ. சங்கத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கான வசதிகளைச் செய்து கொடுத்துள்ளனர். மானிப்பாய் சுகாதார மருத்துவப் பணிமனையைச் சேர்ந்த சுகாதாரப் பரிசோதகர்கள், தாதிமார்கள் அகதிகளின் சுகாதார ஒழுங்குகளைக் கவனித்து வருகிறார்கள். (19)

## கொழும்பு வந்தோரை

# சொந்த மாகாணங்களுக்கு அனுப்ப நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணங்களிலிருந்து கொழும்புக்கு வந்து திரும்பமுடியாத தமிழ், முஸ்லிம் மக்களிடமிருந்து பல கோரிக்கைகள் தமக்கு வந்துள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் செரிந்த ரத்வத்தை தெரிவித்தார்.

அடுத்த இருபத்தி நான்கு மணி நேரத்தில் இவர்கள் சொந்தஇடங்களுக்குத்திரும்புவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாகு அல்லது ஐந்து வாகனங்களில் இவர்களை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உணவுப் பொருட்களை அனுப்பவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் அவர் சொன்னார்.

### கிளிநொச்சி

(1 ஆம்பக்கத் தொடர்ச்சி)

படவுள்ளன.

இம்மாவட்டத்தில்திருக்கோணமலை, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலிருந்து கலவரத்தால் பாதிக்கப்பட்டு வந்த அகதிகள் பலர் தமது உறவினர்கள் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர். சிலர் பொது இடங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

பாடசாலைகளிலும், ஆலயங்களிலும், மசூதிகளிலும் தஞ்சமடைந்துள்ள அகதிகள் பலர் உணவு வசதியின்றிக் கஷ்டப்படுகின்றனர்.

வடகிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வுக்கழகம் மட்டும் கிளிநொச்சி உருத்திரபுரத்தில் ஒரு அகதிமுகாமை நடாத்தி வருகிறது. இவ் அகதி முகாமில் கிளிநொச்சி இராணுவ முகாமுக்கு அண்மையிலுள்ள மக்களே கூடுதலாகத் தங்கியிருக்கின்றனர்.

### ஆஸ்பத்திரி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆஸ்பத்திரியில் தற்காலிகமாக யாழ். போதனா வைத்தியசாலையை மாற்ற நடவடிக்கைகள் நடைபெறுகின்றன.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக் குழு விடுதலைப்புலிகளுடனும், ஸ்ரீ லங்கா அரசுடனும் பேச்சு நடாத்தி மீண்டும் யாழ். போதனாவைத்தியசாலையை இயங்க வைக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

### 3இராணுவம்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வந்து கொண்டிருந்த படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் இடம் பெற்றது.

இச் சம்பவத்தில் மூன்று இராணுவத்தினர் பலியானார்கள்.

இராணுவத்தினர் அங்கிருந்து சென்ற பின்னர் நேற்றுக் காலை பொம்மர் தாக்குதல் அவ் விடத்தில் மேற்கொள்ளப்பட்டது.

# மாணவர் உணவு தேசிய பாதுகாப்பு நிதிக்கு

(கொழும்பு)

மாணவர்கள் தமது மதிய உணவுக்கான ஒருநாள் செலவை தேசிய பாதுகாப்பு நிதியத்துக்கு வழங்கவேண்டும் என்று நாளந்தா வித்தியாலயத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கல்வி உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி கேட்டுள்ளார்.

# அதிபர் நியமனம்

(கண்டி)

நாட்டில் உள்ள பாடசாலைகளில் பதில் அதிபர்களாக பணிபுரியும் இரண்டாயிரம் ஆசிரியர்கள் இன்று முதல் நிரந்தர அதிபர்களாக நியமனம் பெறுவார்கள் என்று கல்வி உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

### இன்றைய

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்தனர். இப்பொழுது பிரிவினை சக்திகளுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரவு அளிப்பதாக குற்றம் சாட்டுகின்றார் ராஜீவ் காந்தி என்று குறிப்பிட்டார்.

### பி. பி. ஸி.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அருகில் உள்ள அகதி முகாம் ஒன்றிற்குள் தப்பி ஓடினார்.

அகதிமுகாமை வட்டமிட்டு ஹெலிகப்டர் சுட்டதில் அங்கிருந்த அகதிகளில் மூவர்காயமடைந்தனர்.

### கச்சேரி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

20 தட்டச்சு இயந்திரங்கள் பிரதி எடுக்கும் இயந்திரம் உட்பட மற்றும் பல விலை உயர்ந்த பொருட்களை விடுதலைப் புலிகள் பாதுகாத்து அரசாங்க அதிபரிடம் ஒப்படைத்தனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31 - ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 25ஆம் தேதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.